புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2026** **10 ஜனவரி 2026**

## <u>பத்திரிகை செய்தி</u>

மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி 2025 நிறைவு விழா, முத்தியால்பேட்டை, சின்னாத்தா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்று (10.01.2026) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அறிவியல் மாதிரிகள் வடிவமைப்பதில் மாநில-மாவட்ட அளவில் பரிசுகளைப் பெற்ற மாணவர்களுக்கு சுழற்கேடயம் மற்றும் கோப்பைகளை வழங்கி சிறப்பித்தார்.

முன்னதாக, மாணவ மாணவிகள் உருவாக்கிய அறிவியல் மாதிரிகளை பார்வையிட்டார். தொடர்ந்து, மாணவ- மாணவிகளுடன் கலந்துரையாடல் நிகழ்த்தினார். மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விரிவாக விளக்கம் அளித்து பேசினார். நிறைவு விழாவைத் தொடர்ந்து, பள்ளி மாணவர்களுடன் ஒன்றாக அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டார்.